SHANMUGAM IAS ACADEMY

# விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு

## முந்தைய ஆண்டு வினாக்கள் (2020 – 2026)

TNPSC குரூப் 1, 2, 4 மற்றும் பிற தேர்வுகள் · விடைகள் மற்றும் விளக்கங்களுடன்

**74 வினாக்கள்**

www.shanmugamiasacademy.in

ஒவ்வொரு வினாவின் தொடக்கத்திலும் [ ] அடைப்பில் தேர்வுப் பெயரும் ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ளன. முதலில் விடைகளைப் பார்க்காமல் முயன்று, பின் பகுதியில் உள்ள விடைகளுடன் சரிபார்க்கவும்.

## வினாக்கள்

**1.** VAS-AHGS-2020 **மணியாச்சியில் வாஞ்சிநாதன், மாவட்ட ஆட்சியர் ஆஷை சுட்டுக் கொன்ற போது, இங்கிலாந்து மன்னராக இருந்தவர் யார்?**

(A) நான்காம் ஜார்ஜ்
(B) மூன்றாம் ஜார்ஜ்
(C) ஐந்தாம் ஜார்ஜ்
(D) ஆறாம் ஜார்ஜ்

**2.** VAS-AHGS-2020 **கீழ்கண்டவைகளில் வ.உ.சிதம்பரம் அவர்களால் எழுதப்படாத ஒன்று எது?**

(A) மெய்யறிவு
(B) மெய்யறம்
(C) பாடல் திரட்டு
(D) சூரியோதயம்

**3.** ARGS-2020 **1927 மெட்ராஸில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசுக்கு தலைமை தாங்கியவர் யார்?**

(A) பத்ருதீன் தியாப்ஜி
(B) அன்னிபெசன்ட்
(C) டாக்டர். அன்சாரி
(D) சுபாஷ் போஸ்

**4.** ARGS-2020 **பாரத ஆசிரமத்தை தோற்றுவித்தவர்**

(A) இராஜாஜி
(B) சுப்பிரமணிய சிவா
(C) வா.வே.சு. ஐயர்
(D) பெரியார்

**5.** PTGS-2021 **வாஞ்சிநாதனைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றை தேர்ந்தெடுக்க.**
**(i) அவர் அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்**
**(ii) அவர் புனலூரில் வனபாதுகாப்பாளராக பணியாற்றினார்**
**(iii) பாரத மாதா சங்கத்தின் உறுப்பினர்**
**(iv) பாண்டிச்சேரியில் சுப்பிரமணிய சிவாவால் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றவர்**

(A) (i), (iii) மற்றும் (iv) சரியானவை
(B) (i), (ii) மற்றும் (iii) சரியானவை
(C) (i), (ii), (iii) மற்றும் (iv) சரியானவை
(D) (ii), (iii) மற்றும் (iv) சரியானவை

**6.** AGGS-2021 **ஏன் சுப்பிரமணிய சிவா இரயில் பயணத்தை மேற்கொள்ளவில்லை?**

(A) ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கை
(B) சமூக தரநிலை
(C) தொழுநோயாளி
(D) போராளி

**7.** TNPSC-2022 **சுதேசி நீராவி கப்பல் கழகம் தன்னுடைய நீராவி கப்பலை எங்கிருந்து எங்கு வரை இயக்கியது?**

(A) தூத்துக்குடி – கேரளா
(B) தூத்துக்குடி – கொழும்பு
(C) தூத்துக்குடி – மும்பை
(D) தூத்துக்குடி – கொல்கத்தா

**8.** VCGS-2022 **சுதேசி நீராவி போக்குவரத்து நிறுவனத்தின் "எஸ்.எஸ்.காலியோ" என்ற கப்பல் ________க்கு விற்கப்பட்டது.**

(A) ஆங்கிலேய நிறுவனம்
(B) பிரஞ்சு கிழக்கிந்திய நிறுவனம்
(C) டச்சு கம்பெனி
(D) போர்த்துக்கீசியர்களின் கம்பெனி

**9.** VCGS-2022 **மிகவும் புகழ்பெற்ற பாடலான,**
**"கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேர்வீர்". தொகுத்து வெளியிட்டவர்**

(A) வெ. ராமலிங்கம்
(B) வ.உ. சிதம்பரம்
(C) பாரதியார்
(D) சுப்ரமணிய சிவா

**10.** G2-2022 **கூற்று (A): வ.உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். காரணம் (R): இந்தியக் கடற்கரை வாணிபத்தில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையை அவர் எதிர்த்தார்.**

(A) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி. காரணம் (R), (A) கூற்றை விளக்குகிறது.
(B) (A) கூற்று மற்றும் (R) காரணம் சரி. ஆனால் (R) காரணம் (A) கூற்றை விளக்கவில்லை
(C) (A) கூற்று சரி, (R) காரணம் தவறு
(D) (A) கூற்று தவறு, (R) காரணம் சரி

**11.** EO-2022 **சென்னை மாநில ஆலைகளுக்கு பொருளுதவிச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு**

(A) 1924
(B) 1922
(C) 1929
(D) 1920

**12.** EO-2022 **1930 ஏப்ரல் 13 ல் மெட்ராஸில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரக தலைவர்**

(A) ஆந்திர கேசரி பிரகாசம்
(B) டாக்டர். நடராஜன்
(C) ஸ்ரீபாத சங்கர்
(D) ஆக்கூர் அனந்தாச்சாரி

**13.** DPGS-2022 **சி. ராஜகோபாலாச்சாரி 1930 ஏப்ரல் 13 அன்று உப்பு சட்டத்தை மீறுவதற்காக 98 சத்தியாக்கிரகிகளின் 150 மைல் அணி வகுப்பை ________ முதல் வேதாரண்யம் வரை நடத்தினார்**

(A) மதுரை
(B) திருச்சி
(C) தஞ்சை
(D) மெட்ராஸ்

**14.** CAGS-2022, EO-G3-2022 **'தமிழ்நாட்டின் திலகர்' என்று அழைக்கப்படுபவர் யார்?**

(A) ஈ.வே. ராமசாமி
(B) சி. ராஜாஜி
(C) டி.எம். நாயர்
(D) வ.உ. சிதம்பரம் பிள்ளை

**15.** CAGS-2022 **கலெக்டர் ஆஷ் வாஞ்சிநாதன் என்பவரால் சுட்டு கொல்லப்பட்ட ஆண்டு**

**(A)** ஜூன் 17, 1911 **(B)** ஜூன் 19, 1911
**(C)** ஆகஸ்ட் 17, 1911 **(D)** ஆகஸ்ட் 19, 1911

**16.** G1-2022 **காந்தியடிகள் சபர்மதி என்னும் இடத்தில் ஒரு ஆசிரமம் உருவாக்கினார். அதே போல் இராஜாஜி தமிழகத்தில் ஒரு ஆசிரமம் உருவாக்கினார். எங்கே அதை உருவாக்கினார்?**

**(A)** மதுரை **(B)** வேதாரண்யம்
**(C)** சேலம் **(D)** திருச்செங்கோடு

**17.** G1-2022 **எந்த தமிழ் கவிஞர் தேசியம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டில் உணர்வுகளை தூண்டினார்?**

**(A)** பாரதிதாசன் **(B)** பாரதியார்
**(C)** சுதானந்த பாரதி **(D)** கவிமணி

**18.** G1-2022 **1933-ம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலையத்தில் வெடிகுண்டு வெடித்ததற்காக ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டவர் யார்?**

**(A)** சத்தியமூர்த்தி **(B)** பார்த்தசாரதி
**(C)** காமராஜ் **(D)** அனந்தகிருஷ்ணன்

**19.** CSSE-SI-Fishery-2023 **ஆங்கிலேயர் அச்சுறுத்தல் காரணமாக பாரதி ________ பகுதிக்கு இடம் பெயர்ந்தார்.**

**(A)** மாஹே **(B)** பாண்டிச்சேரி
**(C)** பம்பாய் **(D)** காசி

**20.** Fishery-Inspector-2023 **பிரம்மஞான சபையின் தலைமையிடம் அமைந்திருந்த இடம்**

**(A)** கல்கத்தா **(B)** டெல்லி
**(C)** மெட்ராஸ் **(D)** பம்பாய்

**21.** ACF-2023 **________ ஒரு மருத்துவராகவும் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிரான இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடும் மற்றும் கம்பியில்லாத தந்தி மையத்தையும் நடத்தினார்.**

**(A)** அம்மு சுவாமிநாதன் **(B)** கிருஷ்ணபாய் நிம்ப்கர்
**(C)** தேவகி அம்மாள் **(D)** மஞ்சுபாஷினி சுப்ரமணியம்

**22.** ACF-2023 **ஜீவானந்தம் குறித்த தகவல்களில் சரியானவை**

**(i) ஜீவானந்தம் "உண்மை விளக்க நிலையம்" என்னும் ஆசிரமத்தை தோற்றுவித்தார்**

**(ii) இவர் சுசீந்திரத்தில் நடைபெற்ற கோயில் நுழைவுப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை**

**(iii) ஜீவானந்தம் காந்தி ஆசிரமத்தை சிறுவயலில் நிறுவவில்லை**

**(iv) இவர் வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டார்**

**(A)** (i) மற்றும் (ii) மட்டும் **(B)** (iii) மற்றும் (iv) மட்டும்

**(C)** (ii) மற்றும் (iii) மட்டும் **(D)** (i) மற்றும் (iv) மட்டும்

---

**23.** ACF-2023 **நந்தி மலையில் யார் தனது அரசியல் வாழ்விற்கு பிறகு ஆசிரமத்தை நிறுவியது?**

**(A)** சர் சங்கரன் **(B)** நீலகண்ட பிரம்மச்சாரி

**(C)** S.S. சிதம்பரம் **(D)** சத்தியமூர்த்தி

---

**24.** Veterinary-Assistant-2023, Fishery-Inspector-2023 **காமராசரின் அரசியல் குரு ________**

**(A)** நேரு **(B)** காந்திஜி

**(C)** சத்தியமூர்த்தி **(D)** அண்ணாதுரை

---

**25.** Veterinary-Assistant-2023 **தமிழ்நாட்டில் விற்பனை வரி யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?**

**(A)** இராஜாஜி **(B)** சி.என்.அண்ணாதுரை

**(C)** காமராசர் **(D)** பக்தவச்சலம்

---

**26.** JRO-AP-Psychology-2023 **காமராஜரைப் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானவை?**

**(i) காமராஜரின் அரசியல் குரு சத்தியமூர்த்தி ஆவார்**

**(ii) 1937 இல் சேலத்திலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்**

**(iii) குந்தா ஆறு திட்டம் இவர் முயற்சியால் உருவாக்கப்பட்டது**

**(A)** (i) மட்டும் **(B)** (i) மற்றும் (ii) மட்டும்

**(C)** (i) மற்றும் (iii) மட்டும் **(D)** (ii) மற்றும் (iii) மட்டும்

---

**27.** JRO-AP-Psychology-2023 **கூற்று [A]: "வந்தே மாதரம்" என்பது போராட்டத்திற்கான முழக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது**

**விளக்கம் [R]: வங்காளப் பிரிவினைக்கு எதிரான சுதேசி இயக்கத்தின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது**

**(A)** [A] சரி ஆனால் [R] தவறு **(B)** [A] மற்றும் [R] சரி, [R] என்பது [A]-வின் சரியான விளக்கமாகும்

**(C)** [A] தவறானது, [R] சரியானது **(D)** [A] மற்றும் [R] சரியானது ஆனால் [R], [A]-வின் சரியான விளக்கமல்ல

---

**28.** JRO-AP-Psychology-2023 **இராஜபாளையத்தில் காதி இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் இவர்**

**(A)** ஐ.பி. அரங்கசாமி ராஜா **(B)** இரட்டைமலை சீனிவாசன்

**(C)** டி.எம் நாயர் **(D)** பி. வரதராஜுலு

---

**29.** Road Inspector-2023 **தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் ________ தலைமையில் நடைபெற்றது.**

**(A)** வ.உ.சி
**(B)** வ.வே.சு
**(C)** வாஞ்சிநாதன்
**(D)** நீலகண்ட பிரம்மச்சாரி

**30.** Road Inspector-2023 **ஒடுக்கப்பட்ட மக்களின் கருத்துகளுக்காக வட்டமேசை மாநாட்டில் குரல் கொடுத்தவர்**

**(A)** டி.எம். நாயர்
**(B)** இரட்டைமலை சீனிவாசன்
**(C)** எம்.சி. ராஜா
**(D)** பண்டிதர் அயோத்தி தாசர்

**31.** DEO-2023 **தமிழ் மாவட்டங்களில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது**
**(i) தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த இயக்கத்தில் கலந்துக் கொண்டனர்.**
**(ii) சென்னை நகரில், பெண்கள் பொதுவேலை நிறுத்தம் செய்தனர்.**
**(iii) பக்கிங்ஹாம் மற்றும் கர்நாடகா மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.**
**(iv) சென்னை துறைமுக பணியாளர்கள் மற்றும் சென்னை மாநகரப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.**

**(A)** (i) மட்டும் சரி
**(B)** (i) மற்றும் (ii) மட்டும் சரி
**(C)** (i), (ii) மற்றும் (iii) மட்டும் சரி
**(D)** (i), (ii), (iii) மற்றும் (iv) சரி

**32.** DEO-2023 **வலியுறுத்தல் [A] : சுதேசி இயக்கத்துடன் தமிழகத்தில் தீவிரவாதமும் தலை தூக்கியது.**
**காரணம் [R] : சுதேசி இயக்க தலைவர்கள் மக்கள் தலைவர்களாக மாறினர், இவர்களின் பேச்சும் எழுத்தும் மக்களை எழுச்சியுறச் செய்தது.**

**(A)** [A] சரி; ஆனால் [R] தவறு
**(B)** [A] மற்றும் [R] சரி; மற்றும் [R], [A] விற்கான சரியான விளக்கம்
**(C)** [A] மற்றும் [R] சரி; ஆனால் [R], [A] விற்கான சரியான விளக்கம் அல்ல
**(D)** [A] தவறு, [R] சரி

**33.** Hindu Religious EO G1-2024 **தமிழ்நாட்டில் இராஜாஜி தலைமையின் கீழ் நடைபெற்ற வேதாரண்யம் நடையின் போது கலந்து கொண்ட சத்தியகிரகிகள் எத்தனை பேர்?**

**(A)** 90
**(B)** 95
**(C)** 98
**(D)** 100

**34.** Hindu Religious EO G1-2024 **சரியானவற்றைப் பொருத்துக.**
**பிரிட்டிஷ் இந்தியாவின் சுதேசி இயக்கத்துடன் தொடர்புடைய ஆளுமைகள்**
**1. சுதேசிவஸ்து பிரசாரினி சபா – லோகமான்ய பால கங்காதர திலக்**
**2. சுதேசி சங்கம் – சுப்ரமணிய பாரதி**
**3. சுதேசி ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனம் – வ.உ. சிதம்பரம்**
**4. சுதேசி பண்டப் சமிதி – ஜி. சுப்ரமணியன்**

**(A)** 1, 2 மற்றும் 3
**(B)** 2 மற்றும் 4
**(C)** 3 மற்றும் 4
**(D)** 1 மற்றும் 4

**35.** Hindu Religious EO G1-2024 **கீழ்கண்டவற்றை பொருத்துக**

(a) வைத்தியநாத அய்யர் – 1. மதுரை ஹார்வி தொழிற் சங்க வேலை நிறுத்தம்
(b) ருக்மணி லெட்சுமிபதி – 2. ஆந்திரக் கேசரி
(c) பிரகாசம் – 3. துணை சபாநாயகர்
(d) வரதராஜுலு நாயுடு – 4. ஆலய நுழைவு

**(A)** 4 3 2 1 **(B)** 3 4 1 2
**(C)** 4 3 1 2 **(D)** 1 2 3 4

---

**36.** Combined Accounts Service-2024, EO-G3-2022, Library-2023 **சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி பதிவு செய்யப்பட்ட நாள்**

**(A)** அக்டோபர் 2, 1906 **(B)** அக்டோபர் 16, 1906
**(C)** நவம்பர் 2, 1908 **(D)** நவம்பர் 12, 1908

---

**37.** Combined Accounts Service-2024 **பின்வருபவர்களில் யார் 1890 ல் 'இந்திய சமுதாய சீர்திருத்தவாதி' யை தொடங்கியவர்**

**(A)** வீரேசலிங்கம் **(B)** கே.என். நடராஜன்
**(C)** கே.டி. தெலாங் **(D)** பெஹ்ராம்ஜி மலபாரி

---

**38.** AAO & AHO-2024 **தமிழ்நாட்டுச் சுதேசி இயக்கத் தலைவர்கள் பிபின் சந்திரபால் விடுதலை செய்யப்பட்ட அந்த நாளை ________ ஆகத் திருநெல்வேலியில் கொண்டாடத் திட்டமிட்டனர்.**

**(A)** தொழிலாளர்கள் தினம் **(B)** சுயராஜ்ய தினம்
**(C)** வெற்றி தினம் **(D)** சென்னை தினம்

---

**39.** G4-2024 **கீழ்கண்ட கூற்றுகளில் வ.உ. சிதம்பரம் பிள்ளையை பற்றிய சரியான வாக்கியங்கள் எவை?**

(i) கோபாலகிருஷ்ண கோகலேவின் சீடர் ஆவார்.
(ii) இவர் செக்கிழுத்த செம்மல் என்று அழைக்கப்பட்டார்.
(iii) இந்திய பணியாளர் சங்கத்தை தோற்றுவித்தார்.
(iv) வழக்கறிஞர் ஆவார்

**(A)** (iii) மற்றும் (iv) மட்டும் **(B)** (ii), (iii) மற்றும் (iv) மட்டும்
**(C)** (ii) மற்றும் (iv) மட்டும் **(D)** (i), (ii) மற்றும் (iv) மட்டும்

---

**40.** G1-2024 **கீழ்கண்டவற்றை கால வரிசைப்படுத்துக :**

(1) பாரத மாதா சங்கம்
(2) சென்னை மகாஜன சபை
(3) ஹோம் ரூல் இயக்கம்
(4) மதராஸ் திராவிட சங்கம்

**(A)** (3), (4), (2), (1) **(B)** (2), (1), (4), (3)
**(C)** (1), (2), (3), (4) **(D)** (4), (3), (2), (1)

---

**41.** G1-2024 ஆஷ் கொலை வழக்கில் முதல் குற்றவாளி யார்?

**(A)** சங்கர கிருஷ்ணன் **(B)** நீலகண்ட பிரம்மச்சாரி

**(C)** மாடசாமி **(D)** வாஞ்சிநாதன்

---

**42.** G1-2024 பொருத்துக :

(a) ஆலய நுழைவு அங்கீகாரம் மற்றும் இழப்பீட்டுச் சட்டம் – 1. அண்ணாதுரை

(b) ஆலய அங்கீகாரச் சட்டம் – 2. இராஜாஜி

(c) சுயமரியாதைத் திருமணச் சட்டம் – 3. ஓமந்தூரார்

(d) சென்னை மாநில ஜமீன்தாரி முறை ஒழிப்பு – 4. குமாரசாமி ராஜா

**(A)** 1 2 3 4 **(B)** 2 3 4 1

**(C)** 3 4 2 1 **(D)** 2 3 1 4

---

**43.** G1-2024 பின்வருவனவற்றை பொருத்துக :

(a) ஈ.வெ.ரா. பெரியார் – 1. முதல் இந்திய நீதிபதி

(b) டி. முத்துசாமி – 2. வீரராகவாச்சாரி

(c) மெட்ராஸ் மகாஜன சபா – 3. புதுச்சேரி

(d) பாரதியார் – 4. குடியரசு

**(A)** 4 1 2 3 **(B)** 1 4 3 2

**(C)** 2 3 4 1 **(D)** 3 4 1 2

---

**44.** Combined Technical (IV Post)-2024 தலைவர்களை புனைப் பெயர்களுடன் பொருத்துக :

(a) சி. இராஜகோபாலாச்சாரி – 1. ரோசாப்பு துரை

(b) ஈ.வே. இராமசாமி – 2. தட்சிண காந்தி

(c) ஜார்ஜ் ஜோசப் – 3. வெள்ளி நாக்கு நாவலர்

(d) எஸ். சத்தியமூர்த்தி – 4. தமிழ்நாட்டு ரூசோ

**(A)** 2 4 1 3 **(B)** 2 1 4 3

**(C)** 2 4 3 1 **(D)** 2 3 4 1

---

**45.** Combined Technical (IV Post)-2024 பின்வரும் கூற்றுகளில் தமிழ்நாட்டில் தன்னாட்சி கிளர்ச்சி பற்றி தவறானவை?

(a) இதன் முதல் கூட்டம் கோவையில் வி.பி. மாதவராவ் தலைமையில் நடைபெற்றது

(b) ஜூலை 1916 ல், எழும்பூர் இரயில் நிலையம் எதிரில் பெருத்த ஆர்ப்பாட்டத்தை மாணவர்கள் அரங்கேற்றினர்

(c) ஆளுநர் பென்ட்லெலன்ட் பிரபு தன்னாட்சி கூட்டின் அரசியல் செயல்பாடுகளில் பங்கேற்க மாணவர்களுக்கு தடை விதித்தார்

(d) அன்னி பெசன்டின் கைதிற்க்கு பிறகு தன்னாட்சி கிளர்ச்சியில் இராஜகோபாலாச்சாரியார் ஈடுப்பட்டார்

**(A)** (a) மற்றும் (b) **(B)** (b) மற்றும் (c)

**(C)** (c) மற்றும் (d) **(D)** (a) மற்றும் (d)

---

**46.** Combined Technical (Non-IV Post)-2024 **தவறான பொருத்தத்தை தேர்வு செய்க :**

**(1) ஆஷ் படுகொலை – 1911**

**(2) சுதேசி கப்பல் நிறுவனம் – 1906**

**(3) மெஸ்டன் விருது – 1916**

**(4) ஒத்துழையாமை இயக்கம் – 1918**

(A) (3) மற்றும் (4)
(B) (1) மற்றும் (3)
(C) (1) மற்றும் (4)
(D) (1) மற்றும் (2)

---

**47.** Combined Technical (ITI)-2024 **தமிழ்நாட்டில் கட்டாய இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தி முதலில் உயிர் நீத்தவர் ________.**

(A) கே. அப்பாதுரை
(B) நடராசன்
(C) ஸ்டாலின் ஜெகதீசன்
(D) பல்லடம் பொன்னுசாமி

---

**48.** CTS-ITI-2024 **கால வரிசைப்படி எழுதுக.**

**(1) சென்னை மகாஜன சபை**

**(2) பூனா சார்வஜனிக் சபை**

**(3) சென்னை வாசிகள் சங்கம்**

**(4) பம்பாய் மாகாண சங்கம்**

(A) (1), (2), (3), (4)
(B) (2), (1), (4), (3)
(C) (3), (1), (2), (4)
(D) (3), (2), (1), (4)

---

**49.** CTS-ITI-2024 **சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் _______ ஆவார்.**

(A) எம்.சி. ராஜா
(B) ம. சிங்காரவேலர்
(C) டி.எம். நாயர்
(D) இரட்டைமலை சீனிவாசன்

---

**50.** CTS-IV-POST-II-2024 **கீழ்கண்ட தொடர்களில் உப்பு சத்தியாகிரகத்தை பற்றி சரியானவற்றை தேர்வு செய்க.**

**(1) இராமேசுவரத்தில் உப்பு சத்தியாகிரகம் மேற்கொள்ள முயன்ற தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.**

**(2) உப்பு சட்டங்களை மீறியதற்காக சிறை சென்ற முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதி ஆவார்.**

**(3) 1930 ஏப்ரல் 27இல் திருவல்லிக்கேணியில் பத்து பேர் காவல் துறையுடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தனர்.**

(A) (1) மற்றும் (3) மட்டும்
(B) (1) மட்டும் சரி (2), (3) தவறு
(C) (1) மற்றும் (2) மட்டும்
(D) (1) தவறு (2), (3) சரி

---

**51.** CTS-IV-POST-II-2024 **எந்த ஆண்டு எங்கு நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டிற்கு பெரியார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?**

(A) திருவண்ணாமலை 1924
(B) வேலூர் 1938
(C) காஞ்சிபுரம் 1937
(D) திருப்பூர் 1935

**52.** CTS-IV-POST-II-2024 **"மதராஸ் மாகாணமானது தமிழ் இன மக்களின் வாழ்விடமாக இருக்கிறது. அவர்களின் நாகரீகமானது ஆகத் தொன்மையானதும் மற்றும் அவர்களின் ஒரு பிரிவினரே யூப்ரடீஸ் நதிக்கரையில் பிரம்மாண்ட நாகரீகத்தை ஏற்படுத்திய சுமேரியர்கள் என்றும், பண்டைய காலத்திய தமிழர்களின் வான சாஸ்திரம், சமயப் பாடல்கள், நீதிநெறிகள், சடங்குகள் மற்றும் இன்னப் பிற துறைகளின் வளர்ச்சியானது அசிரிய மற்றும் பாபிலோனிய நாகரீகங்களின் அடித்தளங்களையே ஏற்படுத்தியதென்றும் மற்றும் அவர்களின் புராண இலக்கியம் பற்றிய ஆய்வே கிருத்துவமத பைபிளின் அடிமூலமாகும். தமிழரின் மற்றொரு பிரிவினரே மலபார் கடற்கரையிலிருந்து இடம்பெயர்ந்து அதிசயமான எகிப்திய நாகரீகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டனர் மற்றும் ஆரியர்களும் பல கோணங்களில் இந்த இனத்திற்கு கடன்பட்டுள்ளனர்" யார் தெரிவித்தது?**

**(A)** சுவாமி விவேகானந்தர்
**(B)** சுவாமி தயானந்த சரஸ்வதி
**(C)** பாலகங்காதர திலகர்
**(D)** மாக்ஸ் முல்லர்

**53.** CTS-IV-POST-II-2024 **தென்னிந்திய மக்கள் நல கூட்டமைப்பு நிறுவப்படுதலின் முக்கிய நோக்கம்**

**(A)** பிராமணர் அல்லாதோருக்கான விடுதி ஒன்றை அளித்தல்
**(B)** பிராமணர் அல்லாதவர்களின் துயரங்களுக்கு குரல்கொடுக்க ஆங்கிலம், தெலுங்கு மற்றும் தமிழ் பத்திரிக்கைகளை வெளியிடுதல்
**(C)** பிராமணர் அல்லாதவர்களின் அரசியல் நலனை மேம்படுத்துதல்
**(D)** பிராமணர் அல்லாதோரின் நிலையை கணக்கெடுத்தல்

**54.** G1B&C-2024 **சென்னை வருவாய் வாரியம் 1851 இல் ஒரு உத்தரவை அறிவித்தது. இது நிலையான ஒழுங்கு எண் : 128, பிரிவு - 2 என பிரபலமாக அறியப்பட்டது. நிலையான ஒழுங்கின் நோக்கங்கள் என்ன?**

**(i) அரசாங்கத்தில் வருவாய் சேவையில் உள்ள பிராமணர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துதல்**

**(ii) அரசாங்கத்தில் பிராமணர் அல்லாதவர்களுக்கான அனைத்து காலியிடங்களையும் நிரப்ப வேண்டும்.**

**(iii) அரசியலமைப்பு முறைகள் மூலம் முழு பொறுப்பான அரசாங்கத்தின் இலக்கை அடைய முயன்றது.**

**(A)** (ii) மற்றும் (iii) மட்டும்
**(B)** (i) மற்றும் (ii) மட்டும்
**(C)** (i) மற்றும் (iii) மட்டும்
**(D)** (iii) மட்டும்

**55.** G1B&C-2024 **1813 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தில் சதி ஒழிப்பு திட்டத்தை முதன்முதலில் ______ என்பவரால் கொண்டு வரப்பட்டது.**

**(A)** ராஜாராம் மோகன் ராய்
**(B)** வில்லியம் பெண்டிக் பிரபு
**(C)** ஜி.எம். லஷிங்டன்
**(D)** ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்

**56.** G1B&C-2024 **கீழ்கண்டவற்றுள் எவை சரியாக பொருத்தப்பட்டுள்ளது?**

**(1) TSVMS - தஞ்சாவூர் சங்கீத வித்யா மகாசங்கம்**

**(2) TIM - தமிழ் இசை மன்றம்**

**(3) AIWC - அனைத்திந்திய பெண்கள் மாநாடு**

**(4) AITUC - அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸ்**

**(A)** (1) மற்றும் (3) சரி **(B)** (1) மற்றும் (2) சரி

**(C)** (2) மற்றும் (3) சரி **(D)** (3) மற்றும் (4) சரி

---

**57.** G1B&C-2024 **மெட்ராசுக்கு அருகிலுள்ள உதயவனம் என்ற இடத்தில் சத்தியாகிரக முகாமை அமைத்தவர் யார்?**

**(A)** K. காமராஜ் **(B)** C. இராஜாஜி

**(C)** K. சந்தானம் **(D)** T. பிரகாசம்

---

**58.** SCE-2025 **சரியான இணையைத் தேர்வு செய்க.**

**(1) ஆயிரம் விளக்கு - மக்கிஸ் தோட்டம்**

**(2) பத்ருதீன் தியாப்ஜி - இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு**

**(3) G.A. நடேசன் - புரட்சிகர தேசியவாதி**

**(4) ஒடிசா - மலபார்**

**(A)** (1) மற்றும் (3) சரியானவை **(B)** (1) மற்றும் (2) சரியானவை

**(C)** (2) மற்றும் (3) சரியானவை **(D)** (3) மற்றும் (4) சரியானவை

---

**59.** SCE-2025 **கீழ்கண்டவற்றை பொருத்துக**

**(a) சுதேசி மித்ரன் - 1. ராஜாஜி**

**(b) சென்னை மகாஜன சபை - 2. C. நடேசனார்**

**(c) சென்னை திராவிட சங்கம் - 3. P. ரங்கையா**

**(d) உப்பு சத்தியாகிரகம் - 4. G. சுப்பிரமணியம்**

**(A)** 4 3 1 2 **(B)** 3 4 1 2

**(C)** 2 4 3 1 **(D)** 4 3 2 1

---

**60.** G1&1A-2025 **1908 ஆம் ஆண்டு எந்த மாதங்களில் சுப்பிரமணிய சிவா தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடியில் வேலைநிறுத்தப் போராட்டத்திற்குப் பிரச்சாரம் செய்தார்?**

**(A)** மார்ச் – ஏப்ரல் **(B)** ஜனவரி – பிப்ரவரி

**(C)** பிப்ரவரி – மார்ச் **(D)** ஏப்ரல் – மே

---

**61.** G1&1A-2025 **"இரத்தம் சிந்தாமல் எதுவும் செய்ய முடியாது. ஜப்பான் 20,000 வீரர்களை தியாகம் செய்ய தயாராக இருந்தது. ரஷ்யாவை வென்றது. 15 கோடி இந்தியர்கள் இதைச் செய்தால், சுயராஜ்யம் கிடைக்கும்" என்று கூறிய நபரை அடையாளம் காணவும்.**

**(A)** வ.உ. சிதம்பரம் பிள்ளை **(B)** சுப்ரமணிய சிவா

**(C)** சுப்ரமணிய பாரதி **(D)** வாஞ்சி ஐயர்

---

62. G1&1A-2025 பின்வரும் நிகழ்வுகளைக் காலமுறைப்படி வரிசைப்படுத்துக.
(1) வைக்கம் போராட்டத்தில் காமராஜர்
(2) திருநெல்வேலி கலகம்
(3) சென்னை மகாஜன சபை
(4) சுதேசிச் சங்கம்

(A) (2), (3), (1), (4)
(B) (3), (4), (2), (1)
(C) (4), (2), (1), (3)
(D) (1), (3), (4), (2)

63. G1&1A-2025 கீழ்க்காண்பவற்றுள் எது/எவை வைக்கம் போராட்டம் பற்றிய சரியான கூற்று?
(1) கேரளாவைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் வைக்கம் போராட்டத்தின் மூளையாக செயல்பட்டார்.
(2) தீண்டாமைச் சிக்கலில் கிறிஸ்துவரான ஜார்ஜ் ஜோசப் கலந்துகொள்வதில் காந்தி கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்.
(3) ஜார்ஜ் ஜோசபின் மார்பளவு சிலை மதுரையில் நிறுவப்பட்டுள்ளது.
(4) ஜார்ஜ் ஜோசப்பும், கரூர் நீலகண்டனும் பெரியார் வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்வதை விரும்பவில்லை.

(A) (1), (2), (3), (4)
(B) (1), (2), (3)
(C) (1), (2)
(D) (3) மட்டும்

64. Group 4-2025 கூற்று [A] : சென்னையில் இராஜாஜி தலைமையில் சைமன் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது.
காரணம் [R] : சைமன் குழுவில் உறுப்பினர் அனைவரும் வெள்ளையரே, அதாவது குழுவில் இந்தியரே இல்லை.

(A) [A] சரி, [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A]-ன் சரியான விளக்கம் ஆகும்
(C) [A] தவறு, [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R], [A]-ன் சரியான விளக்கமல்ல

65. Group 4-2025 பின்வருவனவற்றுள் எவை சரியானவை?
(1) மதுரையில் ஹார்வி மில் தொழிலாளர்கள் 1918-இல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
(2) மதுரை ஹார்வி மில் தொழிற்சங்கத் தலைவராக பி.பி. வாடியா இருந்தார்.
(3) டாக்டர். பி. வரதராசுலு அவர்களின் தொழிலாளர் ஆதரவு பேச்சு அரசாங்கத்தின் கண்களைத் திறக்கக் காரணமாயிற்று.
(4) டாக்டர். பி. வரதராசுலு "பிரபஞ்ச மித்திரன்" என்ற பத்திரிக்கையை நடத்தினார்.

(A) (1) மட்டும்
(B) (2) மட்டும்
(C) (1), (3) மற்றும் (4) மட்டும்
(D) (1), (2) மற்றும் (3) மட்டும்

**66.** CTS-ITI-2025 **கூற்று [A]: விடுதலைப்போரை இங்கிலாந்து மக்களின் கவனத்திற்கும் அமெரிக்கர் கவனத்திற்கும் கொண்டு சென்ற பெருமை தமிழ்நாட்டிற்கும் உண்டு.**
**காரணம் [R]: ஓய்வு பெற்ற நீதிபதியும் இந்திய தேசியக் காங்கிரசை நிறுவியவர்களில் ஒருவருமான டாக்டர். சுப்ரமணிய ஐயர் அன்னிபெசன்ட் அம்மையாரின் விடுதலைக்காக அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் துணையை 24.6.1917 இல் நாடினார்.**

(A) கூற்று சரி, காரணம் தவறு
(B) கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்
(C) கூற்று தவறு, காரணம் சரி
(D) கூற்று, காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

**67.** CTS-ITI-LEVEL-II-2025 **மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியவர் _______ ஆவார்.**

(A) சி. இராஜாஜி
(B) கஸ்தூரிரங்கன்
(C) ஜார்ஜ் ஜோசப்
(D) வி. கல்யாண சுந்தரம்

**68.** CTS-IV-2026 **"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**
**சத்தியத்தின் நித்தியத்தை நம்புமியாரும் சேருவீர்"**
**– இதில் வலியுறுத்தப்படும் கருத்து**

(A) அகிம்சை
(B) போராட்டம்
(C) ஆர்ப்பாட்டம்
(D) நம்பிக்கை

**69.** GROUP-2A-MAINS-2026 **பின்வருவனவற்றிலிருந்து சரியாகப் பொருந்திய இணைகளைத் தேர்ந்தெடுக்க**
**(1) தர்மாலயம் – வி.வி. சுப்பிரமணியம்**
**(2) பாரதமாதா சங்கம் – நீலகண்ட பிரம்மச்சாரி**
**(3) பாரதி ஆசிரமம் – வ.உ. சிதம்பரம்**
**(4) சுதேசி கப்பல் கம்பெனி – சுப்பிரமணிய சிவா**

(A) (1) மற்றும் (3) சரியானது
(B) (1) மற்றும் (2) சரியானது
(C) (2) மற்றும் (3) சரியானது
(D) (3) மற்றும் (4) சரியானது

**70.** GROUP-2A-MAINS-2026 **கீழ்க்காண் சென்னை மாகாண ஆளுநர்களை கால அடிப்படையில் வரிசைப்படுத்துக.**
**(1) லூஷிங்டன்**
**(2) தாமஸ் மன்றோ**
**(3) ஹியூஜ் எலியட்**
**(4) ஜார்ஜ் பார்லோ**

(A) (4), (3), (1), (2)
(B) (3), (2), (1), (4)
(C) (4), (3), (2), (1)
(D) (1), (2), (3), (4)

**71.** GROUP-2A-MAINS-2026 சரியானவற்றை பொருத்துக.

(a) சைமன் குழு வருகை – 1. சென்னை

(b) வரிகொடா இயக்கம் – 2. வைக்கம்

(c) ஆலய நுழைவுப் போராட்டம் – 3. பம்பாய்

(d) நீல் சிலை சத்யாகிரகப் போராட்டம் – 4. பர்தோலி

**(A)** 3 4 2 1 **(B)** 1 4 2 3

**(C)** 4 3 1 2 **(D)** 3 4 1 2

---

**72.** GROUP-2A-MAINS-2026 சென்னையில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாட்டினைப் பற்றிய கீழ்க்காண் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

(i) இது சென்னை தீவுத்திடலில் நடைபெற்றது.

(ii) சென்னை மாகாணத்தைச் சேர்ந்த 236 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

(iii) ஆளுநர் கன்னிமாரா, பிரதிநிதிகளுக்கு சிறப்பான விருந்தளித்தார்.

(iv) ராவ்சாகிப் மூக்கணாச்சாரி வரவேற்புக் குழுவின் தலைவராகப் பணியாற்றினார்.

**(A)** (i) மட்டும் **(B)** (ii) மட்டும்

**(C)** (iii) மட்டும் **(D)** (iv) மட்டும்

---

**73.** GROUP-2A-MAINS-REVOKED-2026 த. பிரகாசம் குறித்த சரியான சொற்றொடர்களைத் தேர்வு செய்க.

(1) இவர் 'ஆந்திர கேசரி' என அழைக்கப்பட்டார்

(2) 1946 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார்

(3) இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டது

(4) இவருடைய ஜவுளிக் கொள்கை சென்னை மாகாணத்தில் ஜவுளித் தொழிலை மேம்படுத்தியது

**(A)** (1) மற்றும் (2) மட்டும் சரியானவை **(B)** (2) மற்றும் (3) மட்டும் சரியானவை

**(C)** (2), (3) மற்றும் (4) மட்டும் சரியானவை **(D)** (1), (2) மற்றும் (3) மட்டும் சரியானவை

---

**74.** GROUP-2A-MAINS-REVOKED-2026 வைக்கம் போராட்டம்

(1) கோவில் அருகாமைத் தெருக்களில் நடந்து வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள கோவில் பகுதிகளை சென்று அடைவதற்கு

(2) இரு பிரிவினருக்கான மோதல்

(3) இரு மாநிலங்களுக்கிடையே எழுந்த மோதல்

(4) சாதிகளுக்கு இடையிலான சமத்துவமற்ற தன்மையைக் கேள்விக்குள்ளாக்கி அதை களைவதற்கான எழுச்சி

**(A)** (1) மற்றும் (3) சரி **(B)** (2) மற்றும் (4) சரி

**(C)** (1) மற்றும் (4) சரி **(D)** (4) மட்டும் சரி

---

# விடைகள் மற்றும் விளக்கங்கள்

1. **(C) ஐந்தாம் ஜார்ஜ்**
ஆஷ் 1911 ஜூன் 17 அன்று மணியாச்சியில் சுட்டுக் கொல்லப்பட்டார்; அப்போது 1910 முதல் ஆட்சி செய்த ஐந்தாம் ஜார்ஜ் இங்கிலாந்து மன்னராக இருந்தார்.

2. **(D) சூரியோதயம்**
மெய்யறிவு, மெய்யறம், பாடல் திரட்டு ஆகியவை வ.உ.சி. எழுதிய நூல்கள்; சூரியோதயம் அவர் எழுதியதல்ல.

3. **(C) டாக்டர். அன்சாரி**
1927 டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்கு டாக்டர் எம்.ஏ. அன்சாரி தலைமை தாங்கினார்; இம்மாநாட்டில் சைமன் குழுவைப் புறக்கணிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. **(B) சுப்பிரமணிய சிவா**
சுப்பிரமணிய சிவா தர்மபுரி அருகே பாப்பாரப்பட்டியில் பாரத ஆசிரமத்தை (பாரதமாதா ஆலயம்) அமைத்தார்.

5. **(B) (i), (ii) மற்றும் (iii) சரியானவை**
செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதன் (அன்று திருவிதாங்கூர் சமஸ்தானம்) புனலூரில் வனக் காவலராகப் பணியாற்றினார், பாரத மாதா சங்க உறுப்பினர்; அவருக்கு பாண்டிச்சேரியில் துப்பாக்கிப் பயிற்சி அளித்தவர் வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா அல்ல.

6. **(C) தொழுநோயாளி**
சிறையில் தொழுநோய் பாதிக்கப்பட்ட சுப்பிரமணிய சிவா, தொழுநோயாளிகள் இரயிலில் பயணிக்கத் தடை இருந்ததால் கால்நடையாகவும் மாட்டு வண்டியிலும் பயணம் செய்தார்.

7. **(B) தூத்துக்குடி – கொழும்பு**
சுதேசி நீராவிக் கப்பல் கழகம் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே கப்பல் சேவை நடத்தி ஆங்கிலேய நிறுவனத்துடன் போட்டியிட்டது.

8. **(A) ஆங்கிலேய நிறுவனம்**
வ.உ.சி. கைதுக்குப் பின் சுதேசி கப்பல் நிறுவனம் நலிவடைந்து, எஸ்.எஸ். காலியோ கப்பல் போட்டியாளரான ஆங்கிலேய நிறுவனத்திற்கே விற்கப்பட்டது.

9. **(A) வெ. ராமலிங்கம்**
"கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்ற பாடலை இயற்றியவர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை; இது உப்புச் சத்தியாகிரகத்தின் போது பாடப்பட்டது.

10. **(A) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி. காரணம் (R), (A) கூற்றை விளக்குகிறது.**
கடற்கரை வணிகத்தில் ஆங்கிலேய நிறுவனத்தின் முற்றுரிமையை உடைக்கவே வ.உ.சி. சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்; எனவே காரணம் கூற்றைச் சரியாக விளக்குகிறது.

11. **(B) 1922**
நீதிக்கட்சி ஆட்சியில் சென்னை மாநில தொழில்களுக்கான அரசு உதவிச் சட்டம் 1922-ல் இயற்றப்பட்டது.

**12. (A) ஆந்திர கேசரி பிரகாசம்**

1930-ல் சென்னையில் (உதயவனம்) நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகத்தை ஆந்திர கேசரி டி. பிரகாசம் தலைமையேற்று நடத்தினார்.

**13. (B) திருச்சி**

இராஜாஜி 1930 ஏப்ரல் 13 அன்று திருச்சியிலிருந்து வேதாரண்யம் நோக்கி உப்புச் சத்தியாகிரகப் பயணத்தைத் தொடங்கி ஏப்ரல் 30 அன்று உப்பு அள்ளினார்.

**14. (D) வ.உ. சிதம்பரம் பிள்ளை**

திலகரின் தீவிரவாதக் கொள்கைகளைப் பின்பற்றிய வ.உ. சிதம்பரம் பிள்ளை 'தமிழ்நாட்டின் திலகர்' என்று போற்றப்பட்டார்.

**15. (A) ஜூன் 17, 1911**

திருநெல்வேலி ஆட்சியர் ஆஷ் 1911 ஜூன் 17 அன்று மணியாச்சி இரயில் நிலையத்தில் வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**16. (D) திருச்செங்கோடு**

இராஜாஜி 1925-ல் திருச்செங்கோடு அருகே புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமத்தை நிறுவி கதர் மற்றும் மதுவிலக்குப் பணிகளை மேற்கொண்டார்.

**17. (B) பாரதியார்**

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் தம் பாடல்கள் மற்றும் 'இந்தியா' போன்ற இதழ்கள் மூலம் தேசிய உணர்வையும் ஒருமைப்பாட்டையும் தூண்டினார்.

**18. (C) காமராஜ்**

1933-ல் விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர் காவல் நிலைய வெடிகுண்டு வழக்கில் காமராஜர் கைது செய்யப்பட்டார்; பின்னர் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாததால் விடுவிக்கப்பட்டார்.

**19. (B) பாண்டிச்சேரி**

ஆங்கிலேய அரசின் கைது அச்சுறுத்தலால் பாரதியார் 1908-ல் பிரெஞ்சு ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரிக்குச் சென்று சுமார் பத்து ஆண்டுகள் வாழ்ந்தார்.

**20. (C) மெட்ராஸ்**

பிரம்மஞான சபையின் தலைமையகம் 1882 முதல் சென்னை அடையாறில் அமைந்துள்ளது.

**21. (B) கிருஷ்ணபாய் நிம்ப்கர்**

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது சென்னையில் மருத்துவரான கிருஷ்ணபாய் நிம்ப்கர் தலைமறைவு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒரு இரகசிய வானொலி நிலையத்தையும் இயக்கினார்.

**22. (D) (i) மற்றும் (iv) மட்டும்**

ப. ஜீவானந்தம் ஆசிரமம் அமைத்துச் செயல்பட்டார், வைக்கம் மற்றும் சுசீந்திரம் கோயில் நுழைவுப் போராட்டங்களில் பங்கேற்றார், சிறுவயலில் காந்தி ஆசிரமத்தையும் நிறுவினார்; எனவே (ii), (iii) தவறு, (i), (iv) சரி.

**23. (B) நீலகண்ட பிரம்மச்சாரி**

பாரத மாதா சங்கத்தை நிறுவிய புரட்சியாளர் நீலகண்ட பிரம்மச்சாரி, சிறைவாசம் மற்றும் அரசியல் வாழ்விற்குப் பின் துறவியாகி நந்தி மலையில் ஆசிரமம் அமைத்தார்.

**24. (C) சத்தியமூர்த்தி**

காமராசர் எஸ். சத்தியமூர்த்தியைத் தம் அரசியல் குருவாக ஏற்றார்.

**25. (A) இராஜாஜி**

மதுவிலக்கால் ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுசெய்ய 1939-ல் இராஜாஜி அமைச்சரவை சென்னை மாகாணத்தில் விற்பனை வரியை அறிமுகப்படுத்தியது.

**26. (C) (i) மற்றும் (iii) மட்டும்**

காமராஜரின் அரசியல் குரு சத்தியமூர்த்தி; அவர் முதல்வராக இருந்தபோது குந்தா நீர்மின் திட்டம் உருவானது. 1937-ல் அவர் சாத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார், சேலம் அல்ல.

**27. (B) [A] மற்றும் [R] சரி, [R] என்பது [A]-வின் சரியான விளக்கமாகும்**

1905 வங்காளப் பிரிவினைக்கு எதிரான சுதேசி இயக்கத்தின் போது 'வந்தே மாதரம்' போராட்ட முழக்கமாக ஏற்கப்பட்டது; எனவே காரணம் கூற்றைச் சரியாக விளக்குகிறது.

**28. (A) ஐ.பி. அரங்கசாமி ராஜா**

இராஜபாளையத்தில் காதி இயக்கத்திற்கு அடித்தளமிட்டவர் ஐ.பி. அரங்கசாமி ராஜா; மற்ற மூவரும் இராஜபாளையக் காதி இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் அல்ல.

**29. (A) வ.உ.சி**

தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தை வ.உ. சிதம்பரனார் தூத்துக்குடியை மையமாகக் கொண்டு வழிநடத்தினார்; அவர் சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தையும் தொடங்கினார்.

**30. (B) இரட்டைமலை சீனிவாசன்**

இரட்டைமலை சீனிவாசன் டாக்டர் அம்பேத்கருடன் இணைந்து லண்டனில் நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாம் வட்டமேசை மாநாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாகப் பங்கேற்றார்.

**31. (D) (i), (ii), (iii) மற்றும் (iv) சரி**

1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தமிழகத்தில் தொழிலாளர்களும் பொதுமக்களும் பெருமளவில் பங்கேற்றனர்; பக்கிங்ஹாம்–கர்நாடிக் ஆலை, சென்னை துறைமுகம், சென்னை மாநகராட்சி பணியாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்; பெண்களும் கடையடைப்பில் ஈடுபட்டனர். எனவே நான்கு கூற்றுகளும் சரி.

**32. (B) [A] மற்றும் [R] சரி; மற்றும் [R], [A] விற்கான சரியான விளக்கம்**

வ.உ.சி, சுப்பிரமணிய சிவா, பாரதியார் போன்ற சுதேசி தலைவர்கள் தங்கள் உரைகளாலும் எழுத்துகளாலும் மக்களைத் தூண்டியதால் தமிழகத்தில் தீவிர தேசியம் வளர்ந்தது; எனவே [R] என்பது [A]-க்குச் சரியான விளக்கம்.

**33. (C) 98**

1930 ஏப்ரல் 13 அன்று இராஜாஜி தேர்ந்தெடுத்த 98 தொண்டர்களுடன் திருச்சியிலிருந்து வேதாரண்யம் நோக்கி உப்புச் சத்தியாகிரக நடைப்பயணத்தைத் தொடங்கினார்.

**34. (A) 1, 2 மற்றும் 3**

சுதேசி பாந்தவ் சமிதியை வங்காளத்தில் பாரிசாலில் அஸ்வினி குமார் தத் நிறுவினார்; ஜி. சுப்பிரமணிய ஐயர் அல்ல. எனவே 4 தவறு; 1, 2, 3 சரியாகப் பொருந்தியுள்ளன.

**35.** **(A) 4 3 2 1**

வைத்தியநாத அய்யர் 1939-ல் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் ஆலய நுழைவை நடத்தினார்; ருக்மணி லட்சுமிபதி சென்னை சட்டமன்றத்தின் முதல் பெண் துணை சபாநாயகர்; டி. பிரகாசம் 'ஆந்திரக் கேசரி' என அழைக்கப்பட்டார்; வரதராஜுலு நாயுடு மதுரை ஹார்வி ஆலைத் தொழிலாளர் வேலைநிறுத்தத்திற்குத் தலைமை தாங்கினார். எனவே விடை 4 3 2 1.

**36.** **(B) அக்டோபர் 16, 1906**

வ.உ.சி தொடங்கிய சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனம் 1906 அக்டோபர் 16 அன்று பதிவு செய்யப்பட்டது.

**37.** **(B) கே.என். நடராஜன்**

'இந்தியன் சோஷியல் ரிஃபார்மர்' (Indian Social Reformer) இதழை கே. நடராஜன் (காமாட்சி நடராஜன்) 1890-ல் சென்னையில் தொடங்கினார்.

**38.** **(B) சுயராஜ்ய தினம்**

1908 மார்ச் 9 அன்று பிபின் சந்திரபால் விடுதலையான நாளை வ.உ.சி, சுப்பிரமணிய சிவா ஆகியோர் திருநெல்வேலியில் சுயராஜ்ய தினமாகக் கொண்டாடத் திட்டமிட்டனர்; இதன் தொடர்ச்சியாக அவர்கள் கைது செய்யப்பட்டு திருநெல்வேலி எழுச்சி ஏற்பட்டது.

**39.** **(C) (ii) மற்றும் (iv) மட்டும்**

வ.உ.சி ஒரு வழக்கறிஞர்; சிறையில் செக்கிழுத்ததால் 'செக்கிழுத்த செம்மல்' என அழைக்கப்பட்டார். அவர் திலகரின் தீவிரவாதப் பிரிவைச் சேர்ந்தவர்; இந்திய பணியாளர் சங்கத்தை நிறுவியவர் கோகலே.

**40.** **(B) (2), (1), (4), (3)**

சென்னை மகாஜன சபை 1884, பாரத மாதா சங்கம் 1904, மதராஸ் திராவிடர் சங்கம் 1912, ஹோம் ரூல் இயக்கம் 1916 – எனவே வரிசை (2), (1), (4), (3).

**41.** **(B) நீலகண்ட பிரம்மச்சாரி**

1911-ல் ஆஷ் கொல்லப்பட்ட பின் வாஞ்சிநாதன் தற்கொலை செய்துகொண்டதால், ஆஷ் கொலை (திருநெல்வேலி சதி) வழக்கில் நீலகண்ட பிரம்மச்சாரி முதல் குற்றவாளியாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

**42.** **(D) 2 3 1 4**

ஆலய நுழைவு அங்கீகாரம் மற்றும் இழப்பீட்டுச் சட்டம் (1939) – இராஜாஜி; ஆலய நுழைவு அங்கீகாரச் சட்டம் (1947) – ஓமந்தூரார்; சுயமரியாதைத் திருமணச் சட்டம் (1967) – அண்ணாதுரை; ஜமீன்தாரி ஒழிப்பு செயலாக்கம் – குமாரசாமி ராஜா காலம்.

**43.** **(A) 4 1 2 3**

பெரியார் 'குடியரசு' இதழை நடத்தினார்; டி. முத்துசாமி ஐயர் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதி; சென்னை மகாஜன சபையை நிறுவியவர்களில் எம். வீரராகவாச்சாரியார் ஒருவர்; பாரதியார் ஆங்கிலேய அடக்குமுறையிலிருந்து தப்ப புதுச்சேரியில் வாழ்ந்தார்.

**44.** **(A) 2 4 1 3**

இராஜாஜி 'தட்சிண காந்தி', பெரியார் 'தமிழ்நாட்டு ரூசோ', மதுரை மக்களால் அன்புடன் 'ரோசாப்பு துரை' என அழைக்கப்பட்டவர் ஜார்ஜ் ஜோசப், சொல்வன்மைக்காக 'வெள்ளி நாக்கு நாவலர்' எனப் புகழப்பட்டவர் எஸ். சத்தியமூர்த்தி.

**45.** **(D) (a) மற்றும் (d)**

1916 ஜூலையில் எழும்பூர் இரயில் நிலையத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததும், ஆளுநர் பென்ட்லாண்ட் பிரபு மாணவர்கள் தன்னாட்சி இயக்க அரசியல் செயல்பாடுகளில் பங்கேற்கத் தடை விதித்ததும் உண்மை நிகழ்வுகள்; எனவே (b), (c) சரியானவை, தவறான கூற்றுகள் (a), (d) ஆகும்.

**46.** **(A) (3) மற்றும் (4)**

மெஸ்டன் விருது 1920-ல் வழங்கப்பட்டது; ஒத்துழையாமை இயக்கம் 1920-ல் தொடங்கியது. எனவே (3), (4) தவறாகப் பொருந்தியுள்ளன; ஆஷ் கொலை 1911, சுதேசி கப்பல் நிறுவனம் 1906 சரி.

**47.** **(B) நடராசன்**

1937–39 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்ட நடராசன் 1939 ஜனவரியில் சிறையிலேயே உயிரிழந்தார்; அவரே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் முதல் உயிர்த்தியாகி. அவரைத் தொடர்ந்து தாளமுத்து உயிரிழந்தார்.

**48.** **(D) (3), (2), (1), (4)**

சென்னை வாசிகள் சங்கம் 1852, பூனா சார்வஜனிக் சபை 1870, சென்னை மகாஜன சபை 1884, பம்பாய் மாகாண சங்கம் 1885. எனவே சரியான வரிசை (3), (2), (1), (4). (தேர்வாணைய விடைக்குறிப்பில் '(3), (1), (2), (4)' எனக் குறிக்கப்பட்டிருந்தது.)

**49.** **(B) ம. சிங்காரவேலர்**

ம. சிங்காரவேலர் 1918-இல் சென்னை தொழிலாளர் சங்கம் அமைய உதவியதுடன், 1923-இல் இந்தியாவில் முதன்முறையாக மே தினத்தைச் சென்னையில் கொண்டாடினார்.

**50.** **(C) (1) மற்றும் (2) மட்டும்**

இராமேசுவரத்தில் உப்பு காய்ச்ச முயன்ற தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்; வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்ற ருக்மணி லட்சுமிபதி உப்புச் சட்டத்தை மீறியதற்காகச் சிறை சென்ற முதல் பெண்மணி. திருவல்லிக்கேணி மோதல் பற்றிய மூன்றாவது கூற்று தவறு.

**51.** **(A) திருவண்ணாமலை 1924**

1924-இல் திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டிற்கு ஈ.வெ.ரா. பெரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**52.** **(A) சுவாமி விவேகானந்தர்**

இக்கூற்று சுவாமி விவேகானந்தரின் 'ஆரியர்களும் தமிழர்களும்' (Aryans and Tamilians) என்ற கட்டுரையில் இடம்பெறுகிறது.

**53.** **(B) பிராமணர் அல்லாதவர்களின் துயரங்களுக்கு குரல்கொடுக்க ஆங்கிலம், தெலுங்கு மற்றும் தமிழ் பத்திரிக்கைகளை வெளியிடுதல்**

1916-இல் டி.எம். நாயர், பிட்டி தியாகராயர் ஆகியோரால் தொடங்கப்பட்ட தென்னிந்திய மக்கள் சங்கம், பிராமணர் அல்லாதோரின் குறைகளை எடுத்துரைக்க ஆங்கிலம் (Justice), தமிழ் (திராவிடன்), தெலுங்கு (ஆந்திர பிரகாசிகா) பத்திரிகைகளை வெளியிட நிறுவப்பட்டது.

**54.** **(B) (i) மற்றும் (ii) மட்டும்**

1851-ஆம் ஆண்டின் நிலையான ஒழுங்கு எண் 128(2), வருவாய்த் துறைப் பணியிடங்களை ஒரே சாதியினர் (பிராமணர்) ஆக்கிரமிப்பதைத் தடுத்து, பிராமணர் அல்லாதோருக்கும் பணியிடங்களை வழங்க முயன்றது. முழு பொறுப்பான அரசு என்பது இதன் நோக்கமல்ல.

**55.** **(C) ஜி.எம். லஷிங்டன்**

சென்னை மாகாணத்தில் 1813-இல் சதியை ஒழிக்கும் முன்மொழிவை முதலில் கொண்டுவந்தவர் ஆட்சியர் ஜி.எம். லஷிங்டன் ஆவார்; பின்னர் 1829-இல் பெண்டிக் பிரபு சதியை சட்டப்படி ஒழித்தார்.

---

**56.** **(D) (3) மற்றும் (4) சரி**

AIWC என்பது அனைத்திந்திய பெண்கள் மாநாடு (1927), AITUC என்பது அனைத்திந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (1920) ஆகும். TSVMS என்பது தஞ்சாவூர் சங்கீத வித்யா மகாஜன சங்கம்; தமிழிசை இயக்கத்தின் அமைப்பு தமிழ் இசைச் சங்கம் ஆகும்.

---

**57.** **(D) T. பிரகாசம்**

உப்பு சத்தியாகிரகத்தின்போது (1930) சென்னைக்கு அருகிலுள்ள உதயவனத்தில் டி. பிரகாசம் சத்தியாகிரக முகாமை அமைத்தார்.

---

**58.** **(B) (1) மற்றும் (2) சரியானவை**

1887-இல் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியிலுள்ள மக்கிஸ் தோட்டத்தில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாட்டிற்கு பத்ருதீன் தியாப்ஜி தலைமை தாங்கினார். ஜி.ஏ. நடேசன் மிதவாத தேசியவாதி.

---

**59.** **(D) 4 3 2 1**

சுதேசமித்திரன் - ஜி. சுப்பிரமணிய ஐயர்; சென்னை மகாஜன சபை - பி. ரங்கையா நாயுடு; சென்னை திராவிடர் சங்கம் - சி. நடேசனார்; வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் - ராஜாஜி.

---

**60.** **(C) பிப்ரவரி – மார்ச்**

1908 பிப்ரவரி–மார்ச் மாதங்களில் தூத்துக்குடி கோரல் மில் வேலைநிறுத்தத்திற்காக வ.உ.சி.யுடன் இணைந்து சுப்பிரமணிய சிவா பிரச்சாரம் செய்தார்.

---

**61.** **(B) சுப்ரமணிய சிவா**

தூத்துக்குடி, திருநெல்வேலி கூட்டங்களில் தீவிர உரையாற்றிய சுப்பிரமணிய சிவா இவ்வாறு கூறியதாக அவர் மீதான வழக்கில் குறிப்பிடப்பட்டது.

---

**62.** **(B) (3), (4), (2), (1)**

சென்னை மகாஜன சபை (1884), சுதேசிச் சங்கம் (1906–07), திருநெல்வேலி எழுச்சி (1908), வைக்கம் போராட்டத்தில் காமராஜர் (1924) என்பது சரியான வரிசை.

---

**63.** **(B) (1), (2), (3)**

ஜார்ஜ் ஜோசப் வைக்கம் போராட்டத்தின் மூளையாகச் செயல்பட்டார்; கிறிஸ்தவரான அவர் இந்துக்களின் உள்விவகாரத்தில் ஈடுபடுவதை காந்தி ஏற்கவில்லை; மதுரையில் அவருக்குச் சிலை உள்ளது. பெரியாரை வைக்கத்துக்கு அழைத்தவர்களே ஜார்ஜ் ஜோசப்பும் தோழர்களும் என்பதால் நான்காவது கூற்று தவறு.

---

**64.** **(C) [A] தவறு, [R] சரி**

சென்னையில் சைமன் குழு புறக்கணிப்பு எஸ். சீனிவாச ஐயங்கார் தலைமையில் நடத்தப்பட்டது, இராஜாஜி தலைமையில் அல்ல. சைமன் குழுவில் இந்தியர் எவரும் இல்லை என்பது சரி.

---

**65.** **(C) (1), (3) மற்றும் (4) மட்டும்**

1918-இல் மதுரை ஹார்வி மில் வேலைநிறுத்தம் நடந்தது; அதை ஆதரித்த டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவின் பேச்சு அரசின் கவனத்தை ஈர்த்தது; அவர் பிரபஞ்ச மித்திரன் இதழை நடத்தினார். பி.பி. வாடியா சென்னை தொழிலாளர் சங்கத்தின் தலைவர், மதுரை ஹார்வி மில் சங்கத்தின் தலைவர் அல்ல.

---

**66. (B) கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்**

1917-ல் அன்னிபெசன்ட் சிறைவைக்கப்பட்டபோது, நீதிபதி எஸ். சுப்பிரமணிய ஐயர் அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனுக்குக் கடிதம் எழுதி ஆதரவு கோரினார்; இதனால் இந்திய விடுதலைப் போராட்டம் பிரிட்டன், அமெரிக்க மக்களின் கவனத்தைப் பெற்றது.

**67. (C) ஜார்ஜ் ஜோசப்**

கேரளத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஒருங்கிணைத்தார்; அவர் 'ரோசாப்பூ துரை' என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

**68. (A) அகிம்சை**

இவ்வரிகள் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை இயற்றியவை; வாளும் இரத்தமும் இல்லாத காந்திய அறவழிப் போராட்டமான அகிம்சையை வலியுறுத்துகின்றன.

**69. (B) (1) மற்றும் (2) சரியானது**

பாரதமாதா சங்கத்தை நீலகண்ட பிரம்மச்சாரி தொடங்கினார்; தர்மாலயம் வ.வெ.சு. ஐயருடன் தொடர்புடையது. சுதேசி நீராவிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கியவர் வ.உ.சி.; எனவே (3), (4) தவறானவை.

**70. (C) (4), (3), (2), (1)**

ஜார்ஜ் பார்லோ (1807–1813), ஹியூ எலியட் (1814–1820), தாமஸ் மன்றோ (1820–1827), ஸ்டீபன் லூஷிங்டன் (1827–1832) என்பதே கால வரிசை.

**71. (A) 3 4 2 1**

சைமன் குழு 1928-ல் பம்பாயில் வந்திறங்கியது; வரிகொடா இயக்கம் பர்தோலியில் (1928), ஆலய நுழைவுப் போராட்டம் வைக்கத்தில் (1924–25), நீல் சிலை சத்தியாகிரகம் சென்னையில் (1927) நடைபெற்றன.

**72. (C) (iii) மட்டும்**

1887-ல் பத்ருதீன் தியாப்ஜி தலைமையில் சென்னையில் நடைபெற்ற மூன்றாவது காங்கிரஸ் மாநாட்டின் பிரதிநிதிகளுக்கு ஆளுநர் கன்னிமாரா பிரபு சிறப்பு விருந்து அளித்தார். வரவேற்புக் குழுவின் தலைவர் டி. மாதவராவ் ஆவார்.

**73. (A) (1) மற்றும் (2) மட்டும் சரியானவை**

த. பிரகாசம் 'ஆந்திர கேசரி' என அழைக்கப்பட்டார்; 1946-ல் சென்னை மாகாண முதலமைச்சரானார். இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது 1937-ல் இராஜாஜி அமைச்சரவை ஆகும்.

**74. (C) (1) மற்றும் (4) சரி**

1924–25 வைக்கம் சத்தியாகிரகம், ஒடுக்கப்பட்ட சாதியினர் வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள பொதுச் சாலைகளைப் பயன்படுத்தும் உரிமைக்காக நடந்தது; சாதிப் பாகுபாட்டை எதிர்த்த இயக்கம் இது. பெரியார் இதில் முக்கியப் பங்காற்றி 'வைக்கம் வீரர்' எனப் போற்றப்பட்டார்.